# அரசியல் நிர்ணயசபை உறுப்பினர் டி.எம் காளியண்ணன் அவர்கள்



அன்றைய ஆங்கிலேய அரசு இந்தியாவுக்கு விடுதலை கொடுக்கும் அதிகாரப்பூர்வமான செய்தியை அந்நாட்டின் அமைச்சரவையில் அங்கம் வகித்த 3 ஆங்கிலேய அமைச்சர்கள் கொண்ட குழுவை இந்தியாவிற்கு அனுப்பித் தெரிவித்தனர். 1946 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இக்குழு இந்தியாவிற்கு வந்தது. அந்தக் குழுவின் பணி இந்தியாவில் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணயசபை ஒன்றை ஏற்படுத்துவது, இங்குள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு இடைக்கால அரசை மத்தியில் உருவாக்குவது என்ற இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும்.

அதன் அடிப்படையில் 1946 ஜூலையில் இந்திய அரசியல் நிர்ணயசபைக்கான தேர்தல் நடைபெற்றது. இந்தியா முழுவதும் 202 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அதில் ஒருவர் தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள். டாக்டர் சுப்பராயன் பின்னர் இந்தோனேசிய நாட்டிற்குத் தூதராக நியமிக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக அந்த இடத்திற்கு அரசியல் நிர்ணயசபையின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் அப்போது 28 வயதேயான டி.எம். காளியண்ணன் அவர்கள். இந்தியாவிலேயே அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களில் இன்று நம்முடன் வாழும் ஒரே உறுப்பினர் இவர்தான்.

இந்த ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு இவரைச் சந்தித்து அரசியல் நிர்ணயசபை, அன்றைய இடைக்கால அரசு, சுதந்திர தினத்தன்று நடைபெற்ற டெல்லி நிகழ்ச்சி, ஜவகர்லால் நேரு முதல் பிரதமராகப் பொறுப்பேற்றது, டாக்டர் ராஜேந்திர பிரசாத் முதல்

குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றது, டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் உரை போன்ற பல வரலாற்றுச் செய்திகளை இவரிடம் நேரடியாகக் கேட்டறிந்தோம்.

97 ஆவது வயதில் அடியெடுத்து வைத்துள்ள இவரின் நினைவாற்றலும் ஆங்கிலப் புலமையும், சரளமான தமிழும் நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது.

அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களெல்லோரும் அப்படியே இடைக்கால அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக விளங்கினார்கள். இந்த அடிப்படையில் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் திரு டி.எம். காளியண்ணன் அவர்கள்.

டெல்லி, பஞ்சாப், கல்கத்தா என்று எங்கோ தொலைதூரத்தில் இருந்தாலே சென்று பார்க்க வேண்டிய அளவுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவர் அருகிலுள்ள நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் வாழும் போது அவரை நம்மைப் போன்றவர்கள் சென்று சந்தித்து உரையாடவில்லையெனில் அது வரலாற்றுப் பிழையாகிவிடுமல்லவா ?

அந்தக் காலத்திலேயே இண்டர்மீடியட், எஃப்.ஏ, பி.காம், எம்.ஏ ( பொருளாதாரம் ) போன்ற அனைத்து உயர்படிப்புகளையும் சென்னை- லயோலா கல்லூரியிலும் பச்சையப்பன் கல்லூரியிலும் படித்தவர். 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் ராசிபுரம் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். பின்னர் 1957 மற்றும் 1962 இல் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்வு செய்யப்பட்டார். 1967 இல் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றிபெற்றார். மேலவையில் சட்டமன்ற எதிர்கட்சித் துணைத் தலைவராகவும் விளங்கினார்.

அக்காலத்திலேயே ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு நின்று வெற்றி பெற்றார். அப்போது சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்கள் ஒன்றாக இருந்தது. ஆகவே இப்பதவி அமைச்சர் பதவியைவிட செல்வாக்குமிக்கதாக மதிக்கப்பட்டது.

கல்லூரி மாணவராக இருந்தபோதே அரசியல் ஈடுபாட்டின் காரணமாக இவரின் நண்பர்களுடன் வடக்கே வார்தாலிலுள்ள காந்தி ஆசிரமத்திற்குச் சென்று காந்தியடிகளுடன் 12 நாட்கள் தங்கியிருந்து பணி செய்தார். காந்தியடிகளிடம் பயிற்சியும் பெற்றார்.

ராஜாஜியால் தொடங்கப்பட்ட திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தின் வளர்ச்சியில் தொடக்கத்திலிருந்தே மிகுந்த ஈடுபாடு காட்டியதோடு ஆசிரம வளர்ச்சிப் பணிகள் அத்தனையிலும் தனது வலுவான பங்களிப்பைச் செலுத்தியுள்ளார்.

பிற்காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராகவும் பொருளாளராகவும் பொறுப்பு வகித்துச் செயல்பட்டுள்ளார்.

இவரின் முன்முயற்சியால் மட்டும் சுமார் 1,000 அரசுப்பள்ளிகள் இவர் பொறுப்பிலிருந்த காலகட்டத்தில் தொடங்கபட்டுள்ளது. கல்வி வளர்ச்சியில் இவரது பணி என்றென்றும் நினைத்துப் போற்றத்தக்கதாகும்.

இவரின் ஏற்பாட்டின் மூலம் சேலம் மாவட்டத்தில் சுமார் 200 நூலகங்கள் திறக்கப்பட்டன. மாவட்ட நூலகக் குழுவின் தலைவராகவும் திகழ்ந்தார்.

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக கண்ணகி விழாவை திருச்செங்கோடு பகுதியில் தொடர்ந்து நடத்தி வந்தார்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றியதோடு பல கால்வாய்களை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விளைநிலங்களாக மாற்றியுள்ளார். விவசாய வளர்ச்சியும் கூட்டுறவு அமைப்புகளின் உருவாக்கமும் இவரின் உயிர்த் திட்டங்களாக விளங்கியுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளிபாளையம் காவிரி பாலம், சங்ககிரி சிமெண்ட் ஆலை, சேசசாயி பேப்பர் மில் போன்ற மிகப்பெரிய நிரந்தரத் திட்டங்கள் இவரின் சீரிய முயற்சியால் கிடைத்தவை.

கொல்லிமலைக்குப் பாதை அமைத்ததும் இவரே.

இவரின் சொந்த நிலங்களில் பெரும்பகுதியை கல்வி நிலையங்கள், கோவில்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு இலவசமாகவும், குறைந்த விலையிலும், மிகநீண்டகால குத்தகைக்கும் கொடுத்து மகிழ்ந்துள்ளார்.

இத்தகைய வரலாற்று நாயகரைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியது நமக்குப் புத்துணர்வையும் மன நிறைவையும் அளித்தது.

******************************************************************************************